FOR INTER - CULTURAL STUDIES
UNIVERSITY LANE,
JAFFNA, SRI LANKA

# THE MORNING STAR

*Regis[te]red as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Estab[lish]ed: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 2 JAFFNA, FRIDAY, 5th MARCH, 1982 No. 10

RIGHTE[O]USNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

*Subscription*

Inland: Rs. 35/- per year.
Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*
**The Manager,**
'Morning Star', Vaddukoddai.

EVELYN RUTNAM INSTITUTE
REFERENCE LIBRARY

## The Colombo YMCA

The Colombo YMCA in its Centenary Year is focussing on its fully equipped Health Club with its modern aids — walking platform, rowing machine, exercising cycle, and slim wheel.

Formal National Champion, Henry Victor Perera will conduct training classes in wrestling. A Japanese Instructor, Y. Saito, will give lessons in Jedo for Juniors and Kithsiri de Soysa for the Seniors.

The American Sports Ambassadors, Miller and Cook, will take care of Basketball.

## Atchuvely Shooting Incident

Mr. C. V. Wigneswaran, District Judge Mallakam has allowed bail of Rs. 2000 on each of the eleven army men produced before him as suspects in the shooting incident at Pathalmany, Atchuvely where Kandiah Navaratnam was found dead with gunshot injuries.

The Judge fixed the trial for 10-3-82.

[CDN-1-3-82]

## New Eyes for the Facts of Life in the 1980's

*Images of Life* is the title of a series of Bible Study Resources which the World Council of Churches has issued to enable people to "look with new eyes" at the facts of life in the eighties.

These studies are part of the preparation for the Council's Sixth Assembly at Vancouver, Canada to be held from the 24th of July to the 10th of August, 1983. The theme of the Assembly is *Jesus Christ — the life of the World*".

The studies focus on seven bibilical images — the way of life, birth, the house of living stories, the bread of lfe, the treasure of life, the crown of life and the water of life.

Alongside the beauty of the modern world, says the introduction to the study resources, there are the more commonly seen cruel facts of life such as the hunger of millions, military build-ups, and exploitation of men and women. "We may not shut our eyes to these facts of life. Our calling is to look at them with new eyes" it says'

To series differs in style from conventional Bible studies. Instead of beginning with a bibilical text and analysing it, each study starts by exploring an image of life found in the Bible and then moves on to specific texts for further reflection.

A set of 14 pictures is part of the resources to help groups use "Photo language" in their study.

"*Images of life*" (English Edition) can be ordered from the WCC Publications Office at a cost of US dollars 3.50. A set of seven large posters may be ordered separately at a cost of US dollars 5.50.

[Taken from *The Ecumenical Press Service.*]

## A Lenten Meditation

*Seek Ye First the Kingdom of God and His righteousness and all these things shall be added Unto You.* (Mt. 6:33).

This is a familiar passage taken from the Sermon on the Mount. We are living in a materialistic world with the present day problems of inflation in our country as well as in the world it is natural for human beings to worry about what will happen to us tomorrow and how we are going to face our future. To this and similar problems Jesus is addressing by saying do not worry about food, cloth or money but we should accept God as our King over the rules of this world. Seek His Kingdom first. Let God and always God be our first priority in all situations of our liie. We have to submit ourselves to Him totally and surrender ourselves fully to Him.

What is this Kingdom of God we are talking about? Without making that phrase a highly complex theological one is it possible for us to explain that in simple terms. Kingdom of God is an eternal one and it points to a quality of life. First it is accepting the Kingship of God. It is a Kingdom of great pearls which cannot be brought by gold. Those great pearls are love, humbleness, joy, peace, justice, bearing each others burdens, sacrifice, brotherhood, sisterhood, and living an orderly, useful and a meaningful life. When we begin to seek God and His Kingdom we become automatically members or citizens of His Kingdom.

Seeking His righteousness means fighting for justice, eliminating exploitation and sharing our wealth equally with others. It is trying to fight against conscious and unconscious sins that surrounds us and of ourselves.

When we have God always our first priority and seek His Kingdom and His righteousness God himself will see that all our problems solved. But in cases where we fail to do this, and try hard to seek only the riches and the wealth of this world these efforts will only bring more and more sadness. Pearls that could be brought by gold cannot lead to everlasting peace at happiness, but the priceless pearls of His Kingdom the greatest of which is love can lead us to eternal joy, Peace and Happiness. Even if all our wealth is taken away can any body, including angels forget about satan, separate us from the priceless treasure, the greatest of all pearls the Love of God?

— **Rev. Nesakumar Kadirgamar.**

## *Church News from Abroad*

O *Zimbabwe Salvationists* have protested against the decision of the International Salvation Army to resign as a member World Council of Churches from October 1981. "We see no conflict said the Salvation Army Territorial Commander at at Zimbabwe" between liberation movements which fight for human rights and the gospel of love, charity and the liberation of total man".

The Salvation Army has an 86 country membership. It is not known what the reactions are in other countries.

O *Laborem Exercens* is the title of Pope John Paul's third cyclical letter. Sent to the World's Roman Catholic Bishops the document sets forth current church teaching on labour union's.

Affirming the right of workers to form unions, the Pope calls them 'a mouth piece for the struggle foi social justice' and not merely 'a reflection of the class structure of society'. They must not be subjected to the decision of political parties or have close links with them.

O *Dowry Deaths in Delhi* area have been reported to be four in 1979, six in 1980 and thirteen in 1981. Social evils are not easily abolished by legislation. Cases of death of young married women whose parents fail to give the dowry promised, continue to be a tragic feature of social life in certain parts of India.

Among Christians too, the practice exists although few deaths have been reported. The dowry is exacted in christian circles in India according to a prevailing scale of "prices", for different types of bridegrooms.

## *IN BRIEF*

O *World Day of Prayer* (5-3-82) has long been an occasion for women from two religious traditions in Ireland to join together in worship. They have spent more than three years preparing material for the 1982 service on the theme:- "The people of God Gathered for Worship - Scattered in Service".

World Day of Prayer is celebrated by christian women in more than 170 nations and regions every year.

O *Population Talks:* The Third Asian and Pacific Population Conference of the ESCAP will be held at the BMICH from September 20 to 29 this year. Around 500 delegates from 40 countries are expected to attend the Conference along with Heads of States from India, Pakistan, Bangladesh and Indonesia.

## IN MEMORIAM

IN EVERLOVING MEMORY
OF
**J. H. A. Alagaratnam**
Called to rest
on
2-3-77

*In Christ he lived in deeds of love*
*In Christ he dwells in peace above.*

Affectionately remembered
by
your dear wife, children
and all your loved ones.

## IN MEMORIAM

IN LOVING AND GRATEFUL
MEMORY OF
**Mathurammah**
(Beloved wife of the
Rt. Rev. S. Kulandran)
who departed this life on
8th March 1974.

"*And God shall wipe away all their tears from their eyes, and there shall be no more death......*"

WILLIAM MATHER
MEMORIAL WOMEN'S CENTRE

## ANNUAL FESTIVAL

Saturday 13th March 1982

**PROGRAMME**

8-00 a. m. Service of Holy Communion —
Rev. H. R. S. Jayachandran
2-30 p. m. Praise Service —
Vembadi Girls' High School
3-30 p. m. Sale
4-30 p. m. Tea & Public Meeting

*Chief Guests:*
**Mr. Devanesan Nesiah**
(G. A. Jaffna & District Secretary)
**and Mrs. Anita Nesiah**

*Snippet*

### Jesus, No Sponsor

A football team made up of local christians in Derbyshire (UK) has been told it cannot wear the name of Jesus on its play shirts.

The team, which calls itself 'Christians United' and includes Anglicans, Methodists and Baptists had wanted to emblazon the Lord's name on their back as a sign of witness.

However the local (and then the national) football Associations said 'no': Jesus was not the name of the team's sponsor, nor of the team itself.

— *CCA News.*

# உதயதாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

'நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்''

மலர் 142 ] 5 — 3 — 1982 [ இதழ் 10


## பத்திரிகைகளும் இன ஐக்கியமும்

இனங்களுக்கிடையிலான சமத்துவத்தையும் ஐக்கியத்தையும் பற்றி ஆங்காங்கே சில சீரிய இயக்கங்கள் சிந்தித்தும் செயலாற்றியும் வருகின்றன. ஆயினும் எமது சமூக அமைப்பிற்குள்ளேயே இனவேறுபாடுகளையும் இனக்குரோதங்களையும் நெய்யூற்றி வளர்க்கும் சாதனங்கள் ஆழமாக வேர் பதித்துள்ளன. அரசியற் கட்சிகள், அரசாங்க ஸ்தாபனங்கள், சமய ஸ்தாபனங்கள், கலாசார இயக்கங்கள், பாடசாலைகள், பாடவிதானங்கள், வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் போன்ற பல்வேறு அமைப்புகளிலும் கூட இதனைத் தெளிவாகக் கண்டு கொள்ளலாம்.

இவற்றில் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை வளர்ப்பதில் வெகுஜனத் தொடர்பு சாதனங்களாகிய வானொலி, பத்திரிகை போன்றன பெரும் பங்கு வகிக்கின்றன. மக்கள் மத்தியில் ஒரு குறிக்கப்பட்ட கருத்தோட்டத்தினை வளர்த்தெடுப்பதில் பத்திரிகைகளின் பங்கு கணிசமானதாகும். இலங்கையில் வெளியாகும் ஆங்கில, சிங்கள, தமிழ் பத்திரிகைகள் இனஐக்கியத்தை வளர்ப்பதில் அல்லது இனக்குரோதங்களை வளர்ப்பதில் எத்தகைய பங்கு வகிக்கின்றன என்று நோக்குவது பயன்மிக்கதாகும்.

1981 ஆகஸ்ட் மாதம் இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரம் பற்றிய செய்திகளை பத்திரிகைகள் எவ்வாறு கையாண்டிருக்கின்றன என்ற ஆராய்ச்சியினை தொடர்பு சாதனங்களுக்கூடாக இனஐக்கியத்திற்கான பேரவை (Council For Communal Harmony Through The Media) யினர் அண்மையில் மேற்கொண்டனர். இனக்கலவரம் நிகழ்ந்த காலத்திற்குச் சற்று முன்னரும் பின்னருமாக மூன்று மாத காலப்பகுதியைத் தேர்ந்து இவர்கள் நடத்திய ஆராய்வின் பயனாக சிங்களப் பத்திரிகைகள் இனக்கலவரத்தைப் பற்றிய செய்திகளை வெளியிட்ட முறைமை ஆங்கிலத்திலே வெளிவந்துள்ளது

தேசிய நலனில் அக்கறை கொண்டுள்ள ஒருவர் இந்த வெளியீட்டினை வாசித்தால் திகைப்புற நேரிடும். வாசகர்களுக்கு, ஒரு பக்கம் சாராது—நடுநிலைமையில் செய்திகளை அறிவிக்க வேண்டிய பத்திரிகைகள் செய்திகளைக் கையாண்டிருக்கும் விதம் பத்திரிகா தர்மத்திற்கு மட்டுமல்ல சமூக நலனுக்கே ஊறு விளைவிப்பதாகும். 150 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாகச் சொற்பொழிவு நிகழ்த்தி ஓர் இளைஞன் உலக சாதனையை நிலைநிறுத்தியமையினை 'லங்காதீப' என்ற பத்திரிகை "சிங்கள—பௌத்த இளைஞனின் உலக சாதனை" என்ற தலைப்பிட்டு செய்தி வெளியிட்டிருக்கிறது. சாதாரண நிகழ்ச்சிகளுக்கும் இத்தகைய இனரீதியான அழுத்தம் கொடுத்து செய்திகள் பிரசுரிக்கப்படுகின்றன

நாம் மேலே குறிப்பிட்ட பேரவையினர் சிங்களப் பத்திரிகைகள் பற்றி நடத்திய ஆய்விலிருந்து பெறப்பட்ட முடிவுகளைப் பின்வருமாறு கூறுகின்றனர்.

"அவர்களின் (சிங்களப் பத்திரிகைகளின்) அபிப்பிராயத்தில், தமிழர்கள் கவலையுறுவதற்கு எந்த அடிப்படையுமேயில்லை. உண்மையில், சிங்கள சமூகமே அச்சுற வேண்டிய நிலைமையில் உள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்திருக்கும் கோரிக்கைகளுக்கு எந்தவித நியாயமுமே இல்லை; அந்த கோரிக்கைகளைத் தடைசெய்வதற்கு போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய அபிப்பிராயங்கள் இப்பிரச்சினையைப் பற்றி விவாதிப்பதற்கே இடமில்லாத நிலைமையை ஆக்குகின்றன. இப்பத்திரிகைகள் இன ஐக்கியத்திற்கான எந்த நடவடிக்கைக்குமே தீங்கு விளைவிக்கும் வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான — தமிழர் விரோத கருத்துக்களையே வாசகர்களுக்கு உணர்த்தியுள்ளது"

இலங்கையில் வெளியாகும் தினமின, தவஸ, லங்காதீப, சிலுமின, ரிவிரஸ, ஸ்ரீலங்காதீப ஆகிய சகல சிங்களப் பத்திரிகைகளும் இத்தகைய ஒரு கண்ணோட்டத்தில் செயற்படுவது எவ்வளவு தூரம் துக்ககரமானது?

சில செய்திகளை வாசகர்களுக்கு அறிவிக்காமலே இருட்டடிப்புச் செய்வது, சில செய்திகளை மட்டும் வெளியிடுவது, அவற்றிற்கு வேறுபட்ட வியாக்கியானம் கொடுப்பது, சில செய்திகளை திரித்து வெளியிடுவது போன்ற அடிப்படையில் முழுச் சிங்களப் பத்திரிகைகளும் செயற்படுமாக இருந்தால் சிங்கள வாசகர்கள் மத்தியில் தமிழர் விரோதக் கருத்துக்கள் வேரூன்றாமல் என்ன செய்யும்? நாள்தோறும் தமிழர் விரோதக் கண்ணோட்டத்திலேயே நின்று செயற்படுகின்ற இப்பத்திரிகைகளின் வாசகர்கள் இத்தகைய நச்சுக் கருத்துக்களிலிருந்து மீள்வதுதான் எப்போது?

வெகுஜன தொடர்பு சாதனங்கள் இன ஐக்கியத்தைச் சிதைத்து, இனக்குரோதத்தினை ஏற்படுத்தும் வகையிலே செயற்பட்டுக் கொண்டிருக்கும் வரையில், இவற்றை மேவி வேறு எந்த இயக்கங்களும் இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் செயற்பாட்டில் வெற்றி காண்பது சாத்தியமில்லை. எமது சமூக அமைப்பிற்குள் இனக்குரோதத்தினை ஏற்படுத்தும் சாதனங்களை இனங்கண்டு, அவற்றை சீர்படுத்தாத வகையில் உண்மையான இன ஐக்கியத்தைக் கட்டி எழுப்புதல் வெறும் கனவாகவே முடியும்.

## மனித உரிமைகளும் பெண்களின் நலன்களும்

— அருளு ஞானதாசன் —

CISRS வெளியீடான RELIGION AND SOCIETY என்ற இதழில் (VOL. XXVIII, NO. 1 — March 1981) அருளு ஞானதாசன் எழுதிய "Human Rights and Women's Concerns" என்ற ஆங்கிலக் கட்டுரை "உதயதாரகை"க்காக இங்கு தமிழ் வடிவில் தரப்படுகிறது.

இந்திய ஜனத் தொகையின் 70-80 வீதமான நிலமற்ற விவசாயிகள், பழங்குடிமக்கள், ஹரிஜனர்கள், ஒழுங்குபடுத்தப்படாத துறைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள், பெண்கள் ஆகியோரைப் பொறுத்தவரையில், சுதந்திரம், சமத்துவம் அடிப்படை உரிமைகள், குடியியல் உரிமைகள், பேச்சுச் சுதந்திரம் போன்ற வலிமை வாய்ந்த சொற்களுக்கு ஒருவித அர்த்தமுமேயில்லை. மனு விதித்த ஹிந்து தர்மத்தில் பெண்களுக்கு சூத்திரர்களுக்கு உரிய இடமே வழங்கப்பட்டிருப்பது எதிர்பார்க்கக்கூடியதேயாகும். சூத்திரர்களுக்கு போன்றே பெண்களும் 'எளியோரை வருத்தி வலியோரை வாழ்த்தும்' சுரண்டல் சமூக அமைப்பில் மோசமாகத் துயருறுவோராவர். சகலரிலும் பெண்களே மிக மோசமாக நசுக்கப்படுவோராவர் என்பது இன்று உணரப்பட்டுவருகிறது. மனித உரிமைகளே கடூரமாக மீறப்படுகின்ற நாட்டிலே பெண்கள் இருமடங்கு அடக்குமுறையை அநுபவிக்க நேர்கிறது.

பெண்கள் மீதான அடக்குமுறையின் மூல வேர்கள் சிக்கலானவையும் பன்முகப்பட்டனவாயும் காணப்படுகின்றன.

### சமூக கலாசார வேர்கள்

இந்தியாவில் பிற கலாசாரங்களின் மீது கணிசமான பாதிப்புச் செலுத்தியுள்ள ஹிந்து கலாசாரம் பற்றி மட்டுமே இங்கு நான் குறிப்பிடுகிறேன்.

### தந்தை வழி சமூகம்

இந்து சமூகமானது அடிப்படையில் தந்தை வழி சமூகமாகும். தந்தை வழி சமூக முறைமைகள் மேலாதிக்கம் பெற்றுக் காணப்படும் உலகின் மற்ற பாகங்களைப் போன்றே இந்தியாவிலும் பெண்கள் ஆண்களோடு ஒப்பிடும்போது இரண்டாம் பட்சமான இடத்தையே வகிக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இந்திய குடித் தொகையில் பெண்கள் 48.2 வீதமாகத் திகழும் நடைமுறையையும் மீறியதாக இந்நிலைமை காணப்படுகிறது. சாதாரணமாகக் குறிப்பிடப்படுவதுபோல, இந்த இரண்டாந்தர நிலைமை என்பது 'பெண்களுக்குரிய' குணும்சங்கள் காரணமாகவன்றி, சமூகப் பாரம்பரியங்களின் கடுமையான சூழலின் தாக்கத்தினாலேயே உருவானதாகும்.

"பெண்களுக்கு எதிரான பொதுவான, பரந்த, ஆழ்ந்த தாக்கமானது உளவியல் ரீதியானவையாகும்." பெண்களின் ஆத்மாவே அழிக்கப்பட்டு விடுகிறது. கருத்து மாற்றத்துக்காக போதனைகள் தொட்டிலில் இருந்தே தொடங்கிவிடுகின்றன. வளையல்களும் கொலுசுகளும் கடுமையான எதனையும் செய்து கொள்ள முடியாத நொறுங்கிப் போகின்ற தன்மையினை உணர்த்துகின்றன. விவேகம் வாய்ந்த குடும்பங்களில் கூட பெண் பிறப்பது என்பது துயர் தருவதாகக் காணப்படுகிறது. ஒரு எண்பது வயது மூதாட்டியிடம் அவரது மகள் பிறந்தபோது எவ்வாறு உணரப்பட்டது என்று கேட்கப்பட்டபோது "அது மரணச் சடங்கு போல இருந்தது" என்று நினைவு கூர்ந்தார். ஒரு மகன் பிறந்தால் அது மகிழ்ச்சியூட்டுவதாகவும், இனிப்புகள் வழங்கிக் கொண்டாடப்படுவதாகவும் அமைகிறது" (கணக்குத் தீர்க்க வேண்டிய ஒரு காலம் — INDIA TODAY, ஆகஸ்ட் — 1-15, 1980)

'புத்ர' என்ற வேதகாலக் கருத்தோட்டமானது ஒரு பெண் மகனைப் பெறுவது அவசியமென வற்புறுத்துகிறது. பெற்றோரதும் சகோதரிகளதும் பொருளாதார வளத்தினை உறுதிப்படுத்துவதற்காக என்பதனையும் விட, தந்தையின் மரணச் சடங்குகளை நிறைவேற்றவே இவ்வாறு வேண்டப்படுகிறது. பரம்பரையின் தொடர்ச்சியினை வலியுறுத்தும் ஆண் மகனுக்குரிய முக்கியத்துவமானது, இந்து சமயத்தின் தந்தை வழி அமைப்பினைப் பலப்படுத்துகிறது.

மனுவின் நீதிப்படி, "ஒரு பெண் சிறுவயதில் அவளது தந்தைக்கும், இளமையில் கணவனுக்கும், அவளது தலைவன் இறந்தால் அவளது புத்திரருக்கும் கட்டுப்பட்டவளாவாள். அவள் எப்போதுமே சுதந்திரம் பெறமுடியாது." அவள் ஒரு தாயாகவும், மனைவியாகவும் மட்டுமே நோக்கப்படுவதோடு, இந்த அம்சங்களே இலட்சியமயப்படுத்தப்படுகின்றன.

மாதவிலக்கு, குழந்தைப் பேற்றுக் காலங்களில் பெண்கள் தீட்டுக்குரியவர்கள் என்று கணிக்கப்படுவதும் பெண்கள் ஆண்களைவிடக் குறைவானவர்கள் என்ற கருத்தினையே வலுப்படுத்துகிறது. இத்தோடு, மனைவிக்கு எதிரான கணவனின் தந்தைவழி அடக்குமுறையும் காணப்படுகிறது. உற்பத்தித் துறையிலிருந்து எவ்வளவிற்குப் பெண்கள் தவிர்க்கப்படுகிறார்களோ அவ்வளவிற்கு அவர்கள் கணவனின் வருமானத்தில் தங்கி வாழுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதற்கேற்ப ஆண்கள் தமது மனைவியர்மீது அடக்குமுறையை மேற்கொள்ள முடிகிறது. பெண்கள் ஆண்களின் உடைமைப் பொருளாகக் கருதப்படுவதால் அவர்கள் பெண்களைத் தாம் நினைத்தது போல் நடத்த முடிகிறது.

### பெண் ஒரு உடைமைப் பொருள்

ஹிந்து தர்மத்தின் இன்னும் மோசமான அம்சம் பெண்களை ஆண்களின் உடைமைப் பொருளாகக் கருதுதலாகும். பெண் ஆணின் உடைமையெனதால், கற்பழிப்பு, உடன்கட்டை ஏறுதல் என்பன நியாயமாக்கப்படுகிறது. இருக்கு வேதத்திலும் பெண்ணின் பயன்பாடு என்பது அவளது பாலியல் சார்ந்ததாகக் கூறப்படுகிறது. பிர்ஹதாரண்யக உபநிடதமானது கற்பழிப்பினைத் திட்டவட்டமாக அனுமதிப்பதோடு அதனை ஊக்குவிக்கவும் செய்கிறது. மயக்கு மொழிகளுக்கும் கையூட்டுக்கும் ஒரு பெண் மசியவில்லையானால் ஆண்மகன் அவளை கையினாலோ, தடியினாலோ அடித்து, "உனது பெருமிதத்தை நான் பெருமிதத்தோடு எடுத்துச் செல்கிறேன்" என்று கூறி அவளை அடக்கவேண்டும் என்று இந்த உபநிடதம் கூறுகிறது. 'கற்பழிப்பு என்பது கூட ஒரு குறையன்று. மூலகர்த்தாவான பிரஹஸ்பது கூட மணமுடித்த ஒரு பெண்ணைக் கற்பழித்தமைக்காகத் தண்டிக்கப்படவில்லை. மாறாக, குருடாகப் பிறந்த அவனது மகனின் மீதே தண்டனை வழங்கப்பட்டது.

(தொடரும்)

நவீன இறையியல்

# பவுல் திலிக்கின் சிந்தனைகள் (1886 — 1965)

( எஸ். ஜெபநேசன் )

இறையியலாளன் தான் வாழுகின்ற சூழலிலிருந்து முற்முக விடுபடுவதில்லை. சூழலும் இறையியலாளனின் தனிப்பண்புகளும் இணைந்தே ஒரு புதிய இறையியல் உருவாகின்றது. சில இறையியல் அறிஞர்கள் தாம் வாழ்ந்த சூழலுக்கும் அப்பொழுது நிலவிய கருது கோள்களுக்கும் எதிராக அவற்றை முற்றிலும் நீக்கி தமது இறையியலை யாத்துள்ளனர். எனவே அவர்களது இறையியற் சிந்தனைகளும் சூழலாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது. ஏனெனில் அவன் சூழலை எதிர்த்துத் தனது காப்புரையை வழங்குகின்முன். சில அறிஞர் சூழலின் கலாச்சாரத்தையும் எக்காலத்தில் பிரபல்யமான தத்துவங்களையும், கருதுகோள்களையும் ஆதாரமாகக் கொண்டு தமது சிந்தனைகளை வளர்க்கின்றனர். இது இணைத்துநோக்கல் அல்லது Synthesis எனப்படுகின்றது.

பவுல் திலிக்கின் இறையியற் சிந்தனைகள் இருபதாம் நூற்றுண்டின் மகோன்னத Synthesis ஆக விளங்குகின்றது. இவருடைய முக்கியமான சாதனை திருமறைப் பதங்களை அறவே நீக்கிவிட்டு, இருபதாம் நூற்றுண்டில் நிகழ்ந்த தத்துவக்கருத்துக்களையும், கலாச்சாரத் தொடர்களையும், மக்கள் தேவைகளையும், நவீன சொற்களையும் ஆதாரமாகக் கொண்டு கிறிஸ்தவ சித்தாந்தத்தை விளக்கியதாகும்.

அவருடைய இறையியல் அலகுமுறையை தொடர்புபடுத்திப்பார்க்கும் முறை (The Method of Corelation) என்று குறிப்பிடலாம்:- (1) இறையியல் மனிதனைக் காப்பாற்றும் இறையியலாக அமைய வேண்டுமெனின் மனிதனுடைய வாழ்வியற் பிரச்சனைகளுக்கு, அதாவது அவன் நாளாந்த வாழ்விற் சந்திக்கும், நம்பிக்கை வரட்சி முடிவற்ற சோகம், எல்லையற்ற சலனம் என்பவற்றிற்கு விடை அளிப்பதாக அமையவேண்டும்.

(2) இறையியலும் மெய்யியலும் (Philosophy) பின்னிப் பிணைந்துள்ளன. அவர் வாழ்வியற் பிரச்சனைகட்கும் இறையியற் கோட்பாடுகளுக்கும் இணைப்பு ஏற்படுத்த முயன்றமையால் அவரை வாழ்வியற் கோட்பாட்டு இறையியலாளன் என்று கருதுவர் (Existentialist Theologian). மனிதனுடைய அறிவுக்குப் புலனாகாத தத்துவங்களைப்பற்றியன்றி, அவனுடைய இன்பதுன்பங்களுக்கு விளக்கம் கூறும் வகையாகவே இறையியல் அமைய வேண்டுமென்று கூறுவர். மெய்ப்பொருள் என்பது மனிதனல் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமைய வேண்டும். அவனுடைய இக்கட்டான நிலைக்கு விடைபகர்வதாக அமையவேண்டும். வாழ்வியற் கோட்பாட்டினை வலியுறுத்துவோர், எத்தகைய வாக்குத்தத்தங்களும், நற்செய்திகளும் இருந்தாலும், மனிதன் "அழுதும் அவனே பிள்ளையைப் பெறவேண்டும்" என்ற பயங்கரமான நிலையிலேயே வாழ்கின்முன் என்று கூறுவர்.

இத்தகைய இறையியல் அணுகுமுறை மனிதனுடைய பகுத்தறிவுக்கு அதிகளவு முக்கியத்துவமளிக்கின்றது. பகுத்தறிவு என்பதற்கு திலிக் ஒரு ஆழமான கருத்தைக் கூறுவர். சாதாரண கருத்தில் மனிதனுடைய ஆருவது அறிவை அவர் கருதவில்லை. உலகம் ஒரு கிரமமான அமைப்புக்களைக் கொண்டு விளங்குகின்றது. அவை தமக்கு நியமிக்கப்பட்ட தொடர்புகளை மனிதனுடைய உள்ளத்திலே தோற்றுவிக்கின்றன. மனிதனுடைய உள்ளத்து அமைப்புக்களும் அவனுக்குப் புறம்பேயுள்ள அமைப்புக்களும் (Structure of External Reality) ஒன்றையொன்று சந்திக்கும் பொழுதுதான் உருவாகின்றது என்பர். எனவே திலிக்கின் சிந்தனையில் பகுத்தறிவு என்பது உள்ளத்து அமைப்புக்களையும் புறம்பேயுள்ள அமைப்புக்களையும், அதனுல் உருவாகும் அறிவுக்கிளர்ச்சியையும் குறிக்கின்றது. உள்ளத்து அமைப்புக்களுக்கும் அதற்கு எதிரும் புதிருமாக நிற்கும் புறவுலக அமைப்புக்களுக்கும் திலிக் வழங்கும் பதம் (Logos) என்பதாகும். கிரேக்க மெய்யியலில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ள (Logos) என்ற பதம் வார்த்தை, பகுத்தறிவு, சிந்தனை, தர்க்கரீதியான பார்வை என்றெல்லாம் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. (Logos) என்றுல் எதிரும் புதிருமான அமைப்புக்களும் அடிப்படையில் முகிழ்த்த பகுத்தறிவு என்று திலிக் கூறுகின்முர். (Logos) உலகெங்கும் வியாபித்திருக்கின்றது என்ற உறுதியிலேயே திலிக் தமது சிந்தனையை வளர்த்துக்கொண்டு செல்லுகின்முர்.

---

## பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி?

(முற்றொடர்ச்சி)

இன்று பண வீக்கம் இராட்சத உருவில் வளர்ந்துவிட்டது. இதனைக் கட்டுப்படுத்தச் சில வழிமுறைகளைக் கூறுகிமுர் இந்திய பொருளியல் நிபுணர் M. R. பை.

தொழில் துறை, மற்றத் திட்டங்களில் அதிக அளவு பணம் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால், இவை அதிக பலனளிக்கும்படியாகச் செய்யப்பட வேண்டும். அவசியமற்ற தொழில்களை விட்டுவிடுதல் வேண்டும். அல்லது, தனி நபரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அரசாங்கத்தின் கவனம் சில வருடங்களுக்குப் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளின் மேல் இருக்க வேண்டும். மின்சக்தி, நிலக்கரி, ரயில், பாலங்கள், இன்ஷூரன்ஸ் செய்திப் போக்குவரத்து போன்றவை முக்கியத் துறைகளின் பட்டியலில் இடம்பெறும். கட்டுப்பாடுகள் எல்லாம் நீக்கப்பட வேண்டும். ஒரே தடவையிலானாலும் சரி, பல்வேறு காலகட்டத்திலானாலும் சரி இது அவசியம் செய்யப்பட வேண்டும். கட்டுப்பாடுகளை நீக்கினுல் உலகமே அழிந்து விடும் என்ற பயப்பிராந்தி பலருக்கு இருக்கிறது. ஆனுல், அதற்கு எதிர்ப்படையாக, கட்டுப்பாடுகளின் பிடிப்பிலிருந்து; அதுவும் மோசமாகச் செயல் படுத்தப்படும் கட்டுப்பாடுகளின் பிடிப்பிலிருந்து பொருளாதாரம் விடுவிக்கப்பட்டால், முதலில் குழப்பமேற்பட்டாலும், சீக்கிரமே உற்பத்தி உன்னத நிலையை அடையும்.

நேர்முக, மறைமுக வரிகள் தீவிரமாகக் குறைக்கப்பட வேண்டும். குறைந்த வரி விகிதங்களைக் கொண்டே அரசுக்கு அதிகப்பணம் கிடைக்கும் அளவிற்கு உற்பத்திப் பெருக்கம் ஏற்படும்.

அரசாங்கத்திற்கு அதன் செயல் முறையே மிகவும் முக்கியம். அதிலும் பொருளாதாரச் செயல்களுடன் ஒன்றி நடப்பதாக வாக்களிக்கும் அரசுக்கு இது மிகவும் முக்கியம். ஆனுல், இதைப் பற்றிய சிந்தனை குறைந்த அளவிற்கே இருக்கிறது. அரசாங்கம் நடத்தப்படும் வழி முறையைச் செம்மையாக்கும் பாதையில் கொண்டு செல்லத் தவறிவிட்டார்கள். கமிட்டிகளும், கமிஷன்களும் ஏற்படுத்துவதைத் தவிர வேறெதுவும் செய்யப்படவில்லை. சிறந்த நிர்வாகத் திறன்களும், கம்ப்யூட்டர் போன்ற சாதனங்களும் இன்று நம்மிடம் இருக்கின்றன. உதாரணத்திற்கு அரசாங்க வருமானத்தில் இன்னும் 5 சதவிகிதத்தை அதிகரிக்கச் செய்ய முடியுமானுல் மத்திய அரசு இன்னமும் 1,000 கோடி ரூபாயை நல்ல முறையில் செலவிட வாய்ப்புகள் கிடைக்கும்.

சுருக்கமாகச் சொல்லப்போனுல், பணக் கட்டுப்பாடும், உற்பத்தியை அதிகரிப்பதும்தான் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் வழி முறைகள்.

ஒரு நாட்டின் அரசாங்கம் இந்த இரு நன்மைகளையும் அடையக் கூடிய வழி முறைகளைக் கடைப் பிடிக்க வேண்டுமானுல், அது அந்த நாட்டின் அறிவுமிக்க மக்களின் கைகளில்தான் இருக்கிறது. ஒரு குடியாட்சியில் உபயோகமற்ற அரசியல் வாதிகள் இருப்பது, நாட்டை நடத்திச் செல்லும் வழிமுறைகளில் கவனக்குறைவு, பணவீக்கத்தின் பயமுறுத்தல் போன்ற இவற்றிற்கு முக்கியமான காரணம் மக்களின் அஞ்ஞானமும், அக்கறையின்மையும்தான் என்பது நன்முகப் புரிகிறது. மக்கள் எப்போது இந்த அடிப்படைக் கருத்துக்களைப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கிமுர்களோ அன்றுதான் பணவீக்கம் என்ற பிரச்னைக்கு முடிவு ஏற்படும்.

நன்றி துக்ளக்

---

## மன்னித்தார், மறந்தார்

புலவர் சே. சுந்தரராசன் மன்னித்தார், மறந்தார் என்ற தலைப்பில் ஒரு சுவையான சிறு கதை எழுதினுர். அது தன்னைக் கள்வன் எனக் கூறிய தன் மனைவியை ஒரு போதும் மன்னிக்காத, அவள் கூறியதை மறவாத ஒரு கள்வனைப் பற்றியது; கதை மனை மலரில் வெளியானது.

இந்தக் கதையை எழுதிய சுந்தரராசன் கதையின் இறுதியில் ஒரு வினு எழுப்புகிமுர்: "மக்கள் யாவரும் இப்படித்தானே?" இதற்கான ஒரு விடைக்கு நமது மனங்களைத் திருப்புவது போல ஆண்டவராகிய இயேசுவின் சிலுவைப் பாட்டை தம் கண்முன்னுக் கொண்டு வருகிமுர். மன்னிக்கும் ஒருவரை அவரிற் காண்கிமுேம்

தாம் செப்பிய கதைக்குத் தகுந்தவொரு முடிவுரையாகச் சுந்தரராசன் சொல்வதைப் படித்துப் பாருங்கள்:

பாவச் சேற்றிலே வீழ்ந்து கிடக்கும் மக்களை மீட்க மனிதனுக அவதரித்து, மனிதனுக்கு மாதிரி வாழ்வைத் தம் வாழ்விலே வாழ்ந்து காட்டிய இயேசு, பாவங்களை மன்னித்தார், மறந்தார். வாழ்க்கை முழுவதுமே அப்படிச் செய்தார்.

அதோ கொல்கதா மலை — பாரமான சிலுவையைச் சுமந்து செல்கின்முர். மலை மேட்டின் பரப்பு — சிலுவை கீழே கிடத்தப் பட்டது. ஐயன் சோர்வாய் நிற்கின்முர். பாவக் கரங்களினுலே ஒருவன் இயேசுவின் தூய மேனியைத் தொட்டுப் பிடித்து வந்து சிலுவையின் மேல் கிடத்துகின்முன், பச்சைத் திருவுடல் பதைக்கப் பதைக்க — துடிக்கத் துடிக்கக் கைகளிலும் கால்களிலும் ஆணிகளை அடிக்கின்முன். சிலர் சேர்ந்து அச்சிலுவையைத் தூக்கி நிறுத்துகின்றனர். ஐயன கள்வர்களுக்கிடையில் சிலுவையில் தொங்குகின்முர். ஈட்டியால் ஒருவன் எட்டியே குத்துகின்முன். கோல் கொண்டு ஒருவன் தலையில் அடிக்கின்முன். கடுர மனங்கொண்ட ஒருவன் எச்சிலைத் துப்புகின்முன். வம்பர் கூட்டமும், அன்பர் கூட்டமும் இயேசுவின் எதிரே காட்சியளிக்கின்றன.

தம்முடையவர்கள் எப்போதும் தம்மோடு இருக்கிமுர்கள். ஆதலின் தமக்குக் கொடுமை செய்தவர்களையும் தம் அன்பின் வெள்ளப் பெருக்கில், திருவருட் கண்பார்வையில் அரவணைக்க விரும்பிய அவர், தம் இயற்கையான அன்பால் பிதாவை நோக்கிப் 'பிதாவே இவர்களுக்கு மன்னியும், இவர்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிமுர்களே' என வேண்டினுர்.

சிலுவையில் தொங்கிய வெயில்வேளையில், மாண்டுபடும் சரீர வேதனைக் கிடையிலும், உயிரை வதைத்தவரை மனப்பூர்வமாக மன்னித்தார், மறந்தார். அவர்களுக்காக இறைவனிடம் வேண்டுதல் செய்தார். இதுவன்றே மன்னிப்பு!

மகா வித்துவான் H. A. கிருஷ்ணப்பிள்ளை மொழியால் இந்நிகழ்ச்சியை நாம் உணர்வோமாக,

தன்னரிய திருமேனி சதைப்
புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போது
பரிந்தெந்தாய்
இன்னதென வறிகிலார் தாஞ்
செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனிவாய்
மலர்ந்தார் நம் மருள்வள்ளல்.

(தன் + அரிய = தன் அருமையான, திருமேனி = பாவமறியாத தூய உடல் பன்னரிய = சொல்ல முடியாத. பரிந்து = அன்பு கொண்டு. எழில் = அழகு. கனிவாய் = கொவ்வைக்கனி போன்ற வாய்.)

---

மறுமைப் பிரவேசம்

## நல்லம்மா குணநாயகம்

காரைநகர் திருச்சபை அங்கத்தவரும், இளைப்பாறிய ஆசிரியையும், காலஞ்சென்ற திரு. சாமுவேல் குணநாயகம் அவர்களின் பாரியாருமான திருமதி நல்லம்மா குணநாயகம் இம் மாதம் 18-ம் திகதி அதிகாலை மறுமைக்குள் பிரவேசித்தார்.

இவரது பிரேதசேம ஆராதனை அலவ் வீதியிலுள்ள அன்னுரது இல்லத்தில் 21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்குச் சபைப் போதகர் கனம் T. S. பிரேமராஜா அவர்களினுல் நடத்தப்பட்டது. கனம். S. மகேஸ்வரன் அவர்களும், கனம் N. W. G. சுகுணராஜா அவர்களும் முறையே பாராட்டுரை, பிரசங்கம் செய்தனர். அடக்க ஆராதனையைச் சபைப் போதகர் நடத்தினர்.

இவரது பிரிவால் துயருறும் இவரது பிள்ளைகள் — ஜெயபாலன் (இங்கிலாந்து), ஜெயசந்திரன், ஜெயசீலன் (சவூதி அரேபியா), ஜெயரஞ்சினி ரவீந்திரராஜ், மருமக்கள் — அன்னரோஜினி ஜெயபாலன், ரவீந்திரராஜ், சகோதரன் திரு. இராசையா, சகோதரி — திருமதி சத்தையா, மற்றும் உறவினர், நண்பர்கள் யாவருக்கும் இறைவனின் ஆறுதல் கிட்டுவதாக.

*EDITORIAL*

## Election Year

"*We have lost the Test Match. The drought is causing havoc in the lives of our people. With all this, Mahaveli is only a trickle*"

These words from a speech reported to have been made by Minister Gamini Dissanayake, at a Conference of Government Agents at the ARTI (*Sun* 26-2-82) expresses poignantly the unhappy truth that *The Election Year*, the only year left for the government to show the people what it has done, has not had a very auspicious start.

As president of the Sri Lanka Cricket Board, Minister Gamini Dissanayake is understandably emotional regarding the 'decision' of Sri Lanka's Inaugurel Test Match — a decision which excitingly hung in the balance till the eleventh hour.

A deep chill seems to have settled in the mind of the President of the Sri Lanka Cricket Board. This has obviously coloured his feelings as Minister of State about the drought which has hit his Ministry more than any other and has particularly damaged the blocks of peasant cultivators, surrounding the Kalawewa - Balalawewa tanks under the Mahaveli Authority.

Besides, the uncanny timing with which the drought appeared in Sri Lanka when the Test Cricket 'fever' was at its zenith has unfortunately resulted in a rash of caustic comments in the news media.

The *Tribune* and *Eelanadu* have pointed out the "disequilibrium" poignantly evident in wasting millions of gallons of water on the cricket turf, at a time when the smouldering discontent among peasant cultivators (in seventeen out of the twenty four districts) has boiled to the point of breaking the sluice gates (kept closed to conserve water).

We cannot, of course, blame the government for our defeat at the Inaugural Test Match or for the drought which has parched even much of the lush up-country vegetation.

"Life", it is said, is a series of blind dates beyond human planning". When the Inaugural TEST Match was planned, few would have anticipated a prolonged drought of this magnitude.

Though fundamentally we agree with the views of our contemporaries, the *Tribune* and *Eelanadu* on the question of priorities, there is a mitigating factor in the situation which we in Sri Lanka cannot totally ignore.

Few can deny that the Inaugural TEST Match in Sri Lanka has afforded to the people of this country a focal point for a healthy perspective in the somewhat corrosive atmosphere affecting the citizens today.

Indeed, despite the racial tension, terrorism which swept over the country in recent times, one of the few moments of solidarity has been, for many, the time spent at the Saravanamuttu Stadium to view the Inaugural TEST match.

But all the same *Election Year*, cannot be one in which the government hierarchy or government officers or even the people can afford to be pre-occupied with cricket and with 'bread and circuses'.

It should, be conceded that in many areas of government activity, sore points remain which make peoples' lives less joyous and less fulfilling than normally they could be.

Two significant problems, confronting the government require objective consideration during election year. One concerns the future of education in this country and the other, the image of the public service.

Every educator would assert, that the decision of the government to retain the status quo with regard to university admissions in Sri Lanka (withdrawing almost immediately a Scheme of the UGC which offered more places for merit) is an unhappy augury to set the scene in this country for the new drastic changes recommended by the Government in its own *White Paper*.

The issue of the sacked strikers' — as the news media has unkindly termed a group of public servants in this country, some of whom have gone grey in their government service — is, again a problem which is tragically familiar in this country, of cabinet decisions falteringly implemented, with many a slip between the cup and the lip.

The policy of allowing each ministry to go its own way regarding decisions taken collectively by the cabinet reveals a dimension in democracy which we have not witnessed before in this country.

As to the Tamil Problem and Election Year, a sentiment that recurs constantly in every conversation in Jaffna is whether President Jeyawardene who has pitched his tale of *Devolution* in Sri Lanka too strongly, will have the muscle to help to deliver what he has promised.

We on our part have little doubt that he has. But what nobody can predict is *how* he will accomplish this great task.

*Comment*

### The Institute for Christian Translators

The following are some comments made by *Dr. S. P. Appasamy* on the first workshop for Christian Translators held in India:-

"We cannot but remember that William Carey who first translated the Bible into Bengali also made an effort to translate the Ramayana into English.

So also the great hearted christian missionaries who promoted the translation of the Bible into Tamil and other South Indian languages also realised the importance of the linguistic heritage of the areas so that we have the translation of *Tirukkural* by G. U. Pope and the *Hymns of the Alwars* by J. S. M. Hooper. The new movement to return to the roots of our own culture that are now evident needs indeed to be strengthened by a fresh generation of translators from ourselves.

Not only do we need our own translators and interpreters of the ancient classics but also of christian literature that is already available to us, so that the rest of the country and the rest of the world may become familiar with it.

The hymns and poems of H. A. Krishna Pillai and the poetical work of Vedanayagam Sastriyar should and could reach a wider audience both in our own country and abroad. Narayan Vaman Tilak's work translated years ago by Nicol Macnicol has had a world wide acceptance. Should not a modern poet like Joshua of Andhra have as wide an acceptance?

While it is recognised that the translation of Literature of particularly of poetry is difficult, and poets are now talking of transcreation of such work, we must recognise that it is only such work that truly speaks to the human heart.

It is the true poet that presents his insights into the human predicament at our crucial time in history and therefore is most meaningful to us both in India and to the West.

The richness of creative literature should flow into the life of the church today, even though it may be from other religions viewpoints. We are conscious of a renaissance in our cultural and literary life in every one of our languages. Should not the inter relationship of these different streams enrich the whole?

It is only such an enrichment that can open our hearts and minds to the best in our country and bring us into the depth of the heritage that is ours.

It is the task of the Christian translator to lay all that is of good report at the feet of Christ".

[Taken from *The Guardian* as reported in the *NCC Review*]

### Peace Priority as Voted by General Synod

The United Church of Christ (US) at its 13th General Synod meeting had made the following goal statements. The United Church Board for World Missions (UCBWM) has also made three requests to its overseas partners:—

**Goal Statement:**

To enlist all parts of the church, as witnesses for Christ and humanity, in study and action to the end that:

* The Biblical and theological role of the church and its members be explored and implemented;
* politics and programs be developed to resolve global tensions and create a peaceful world;
* the dependence of the United States and world economics on the production of armaments be reversed;
* the area race be reversed;
* the development and use of nuclear and biological weapons be recognized as completely contrary to the Gospel of Jesus Christ.

**Requests:**

1. The UCBWM would like to broaden the proposed theological reflection within the UCC on the subject of peace and would be grateful for translation of any sermons, pronouncements, articles etc., by Christians and other religious thinkers from your area.
2. The UCBWM is seeking to identify authors and sources for articles relating to the peace mevement in various parts of the world for various UCC publications. Would you be interested in contributing? Can you suggest members of our partner church or other persons within your region who would be able to present perspectives on peace to U.S. Christians?
3. Do you see ways in which the UCBWM could work cooperatively on peace initiatives with our partner church in your area? If so, would you please suggest the types of progress and activities and the best way to explore this kind of co-operation?

*In brief*

O *Arthur C. Clark World Communication Centre* will be the name of the television broadcasting centre for Asia which has been set up in Sri Lanka at a cost of Rs. 500 million. The project will come under the UNESCO.

O *Passport Applicants* need not in future undergo difficulties in establishing their citizenship. The inclussion of the name of the applicant or of his father in the electoral register will be accepted as adequate evidence of citizenship.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./59/300/26/82.*
Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 5th March 1982 and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna.